# திவ்ய ஏகாந்த சேர்த்தி

அன்பர்களே!
இந்த உலகில் நாம் பிறந்ததன் காரணம் பரமாத்ம தத்வத்தினை நம்முள் உணர்ந்து அத்வைத்த பாவத்தில் பரம்பொருளுடன் கலந்து பேரின்ப வாழ்வை வாழத்தான் என்பதை உணர வேண்டும்.ஆனால் இதை நாம் அறிந்தும் நம்மால் முழுமையாக உணரமுடியவில்லை.காரணம்,நம் மனது தான்.மனது என்ற உன்னத பொருளை உடையதாலே நாம் ''மனிதர்கள்'' என்று அழைக்கப்படுகிறோம்.அந்த மனம் தான் நமது அனைத்து செயல்களுக்கும்,இன்ப---துன்பங்களுக்கும் காரணம்.இதையே தான் '' தீதும் நன்றும் பிறர் தர வாரா'' என்று சங்க இலக்கியம் கூறுகிறது.இந்த மனம் தான் மனித வாழ்க்கை என்ற உலகப்பயணத்திற்கான விசா எனலாம்.

**மனிதப் பிறப்பினை ப்ளஸ் டூ விற்கு ஒப்பிடலாம்.**
கல்லாகி,மலையாகி,ஓருயிராகி,பறவையாகி,விலங்காகி,மரமாகி நாம் மனிதப்பிறவி என்ற பள்ளி இறுதி வகுப்பினுள் வந்துள்ளோம்.இதுவே உன்னத பிறவி,ஆனால் முறையாகப் பயன் படுத்தாவிட்டால் மிகக் கொடுமையான பிறவி.மனிதனாகப் பிறந்து விட்டோம்.மனம் என்ற கருவி தரப்பட்டுள்ளது.அதை வைத்துத் தான் நம்முள் புதைந்துள்ள பரமாத்மாவை அறிய முடியும்.ஆனால் மனமோ ஆணவம்,கன்மம்,மாயை என்ற கொடூரமான ஆனால் அழகான அரக்கர்களிடம் அடிமைப்பட்டு,அவர்களின் மாய உலகில் அடிமையாகி சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறது.இந்த முப்பெரும் அரக்கர்களின் பிடியிலிருந்து மனதை மீட்பதே ஆன்மீக சாதனை ஆகும்.எவன் ஒருவன் ப்ளஸ் டூ என்ற மனிதப்பிறவியில் பரமாத்மாவை உணராமல் தோல்வி காண்கிறானோ அவன் மீண்டும் மீண்டும் உலகில் மனிதப்பிறவியாம் ப்ளஸ் டூவினைப் படிக்கிறான்.

**என் மனம் எங்கே இருக்கிறது?**
உதாரணம்:
பள்ளி விட்டதும் குழந்தை வீட்டுக்கு வருகிறது.மறுநாள் தேர்வு.ஆனால் விளையாடத் துடிக்கிறது.அம்மாவோ எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறாள்.பின்னர் குறிப்பிட்ட நேரத்திற்கு விளையாட அனுப்புகிறாள்.குழந்தையும் விளையாடிவிட்டு வருகிறது.ஆனால் வீட்டுக்குள் வந்தவுடன் பசி,சரி நன்றாக சாப்பிடுகிறது.பின்னர் டி.வியில் கார்ட்டூன் பார்க்கிறது.அம்மா மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்க்கிறாள்,கேட்பதாயில்லை.குழந்தையின் புத்தியும் தேர்வைப்பற்றி எண்ணிப் பார்த்து சற்று யோசிக்கிறது,ஆனால் மனம் விட்டதா?டி.வியிலேயே ஆழ்ந்த குழந்தை தேர்வில் தோல்விஅடைகிறது.

இந்த குழந்தை தான் நாம்.நம் மனதின் நிலை இக்குழந்தை போல் தான் வாழ்கிறது.மனம் போன போக்கில் நாம் வாழ்கிறோம்.சரி இந்த ''நாம் '' என்பது யார்?சற்று யோசியுங்கள்.இதோ ஒரு அழகான பயிற்சி.

ஐஸ் கட்டியை எடுங்கள்.கைகளில் வையுங்கள்.சில்லென்று இருக்கிறது.சரி இந்த சில் என்ற உணர்வை உணர்ந்தது எது?

*உங்கள் கைகள்.
*உங்கள் மூளை.
*உங்கள் மனம்.
எது ?மூளை என்றால்,மூளைக்கு அந்த உணர்வை யார் சொல்லித் தந்தது?மனம் என்றால்,சரி நீங்கள் தூங்கும் போது இந்த மனம் எங்கே?
இப்போதுபுரியும் என்று எண்ணுகிறேன்,மனம் வெறும் ஒரு கருவி.அந்த மனதிற்கும் பின்னால் வேறு ஏதோ உள்ளது.

**மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா?**

கண்ணதாசனின் இவ்வரிகள் அவரது ஆத்மபலத்தினை உணர்த்துகிறது.மனம் என்னும் பிள்ளை சதா உலக விஷயங்களிலேயே மூழ்கிக் கிடக்கிறது.அது நினைத்தாலும் வெளியே வர முடியாத அளவுக்கு மாயை தடுக்கிறது.தேர்வுக்குப் படிக்க வேண்டும் என்று எண்ணினாலும்,பிள்ளையின் மனதை டி.வியும்,விளையாட்டும் ,உணவும் ஈர்ப்பது போல் சதா நம் மனதை மாயை ஈர்க்கிறது.இது தங்கக்கூண்டுக்குள் சிறையிடப்பட்ட கிளி போன்றது..கூண்டுக்குள் எல்லாவித வசதிகளும் உண்டு.ஆனால் வெளியே பறக்க மட்டும் சுதந்திரம் இல்லை.

பரமாத்மாவை அறிந்து அதனுடன் இணைந்து சுதந்திரமாக உலாவ நம்மை நம் மனது விடாது.ஏன் என்றால் மனது மாயையின் பிடியில்,ஆங்கிலேயரின் கீழ் அடிமைப்பட்டும் சுகபோக வாழ்வை வாழ்ந்த சில அற்ப அரசர்களைப் போல் உள்ளது தான் காரணம்.இந்த மனதை மாயையின் பிடியில் இருந்து மீட்க வேண்டும்.

**மாயை என்றால் என்ன?**

மாயை என்றால் பலர் ,பல விதக் கருத்துக்களைச் சொல்கிறார்கள்.ஆதிசங்கரர் வழியில் மாயை என்றால் என்ன என்று பார்ப்போம்.உலகில் காணும் அனைத்தும் நம் கண்கள் முன் அழகாக உள்ளன.அவற்றை ரசிப்பதற்கும்,அனுபவிப்பதற்கும் நமக்கு இறைவன் முழுச் சுதந்திரம் அளித்துள்ளான்.ஆனால் அவை அனைத்தும் நிலையானவை என்று நம் மனம் எண்ணி அவற்றின் மீது பற்று வைக்கிறது.அதை சதா அனுபவிக்க ஏங்குகிறது,தவிக்கிறது,கிடைக்காத போது கலங்கி அழுகிறது.,அப்போது வாழ்க்கையே கவலை மயமாகிறது.

நடு இரவில் காலில் பட்ட கயிற்றைப் பாம்பு என் எண்ணி பயப்படுகிறோம்.காலையில் அது கயிறு என்று தெரியும் போது நம் பயம் விலகிவிடுகிறது.அதுபோல தான் நாம் காணும் உலகப் பொருள்கள்,மக்கள்,உறவுகள் என எல்லாமே இருக்கின்றன.ஆனால் அவை நிலையில்லாதவை.அவற்றுள் அழியாத நித்யமான உண்மைப்பொருள் மறைந்துள்ளது.அதுவே பரம்பொருள்.அதுவே உண்மை!அழிவில்லாதது.இந்த பரம்பொருள் தத்வத்தினை உணர வேண்டும்.இந்த உணர்வே மெய்ஞானம் எனப்படுகிறது.

**இதை உணர்வதால் என்ன பலன்?**

இதை உணர்வதால்,எல்லாமே இன்பமயமாகிவிடுகிறது.பற்று இல்லாத போது பயம் போய்விடுகிறது,கவலை இல்லை.

உதாரணம்:உயிரியல் பூங்காவிற்குச் செல்கிறோம்.பல அழகான பறவைகள்---விலங்குகளைக் கண்டு ரசிக்கிறோம்.வீட்டுக்கு வரும்போது நிம்மதியாக வருகிறோம்.காரணம் அவற்றின் மீது பற்று இல்லை,ஆசையில்லை.ஆனால் ரசித்தோம்,மகிழ்ந்தோம் அல்லவா?சரி அதுவே தங்க நகைக்கடை என்றால்?

**ஆத்ம சாதனை செய்தவனுக்கு இரண்டு இடங்களும் ஒன்றல்லவா?**

மாயை வாதம் எல்லோரையும் சந்யாசி ஆக்கிவிடும் என்ற பயமே நமக்குள் உள்ளது.நீங்கள் சந்யாசம் என்றால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு எங்கோ போய் விடுவது என்று நினைப்பது தவறு.சந்யாசம் என்பது விருப்பு--வெறுப்பில்லாத சமநிலையான மனது.அப்போது எல்லாவற்றையும் ரசிக்க,அனுபவிக்க ,மகிழமுடியும்.இதற்கு மிகச்சிறந்த உதாரணம் கண்ணன்.அவன் அனுபவிக்காத போகமா?யோசியுங்கள்!!!

**சரி ,இந்த மன்தை மாயையின் பிடியில் இருந்து எப்படி மீட்பது?**

மாயை என்னும் அழகான கூண்டுக்குள் நம் மனக்கிளி இப்போது உண்மையான சுதந்திரம் வேண்டி தவிக்கிறது.ஆனால் அதற்கு இந்த சுதந்திரத்தினைப் பற்றிப் புரிய வைப்பதற்கு நல்ல குரு தேவை.அவர் கிளிக்கு பக்தி நெறியை ஒரு “மந்திரமாக” சொல்கிறார்.மனக்கிளியும்

அவரை முழுமையாக நம்பி அதைச்சொல்லி வருகையில் ஒரு கட்டத்தில்,குருவின் அருளால் நம்முள் நம் அறிவு விழித்துக் கொள்கிறது.அறிவே மனக்கிளியை மீட்கும் சாவி எனலாம்.

அறிவு என்னும் சாவியால் மாயக்கூண்டில் இருந்து மனக்கிளி வெளியே வந்து விட்டாலும் அவ்வப்போது மாயக்கூண்டில் புதிய புதிய போகானுபவங்கள் கிளியை மயக்கும்.கிளி மீண்டும் அடிமைப் பறவையாகாமல் அறிவு தான் காக்கிறது.

இந்த அறிவின் கீழ் வாழும் மனக்கிளி மெதுவாக சாதனைகள் மூலம் விழிப்புணர்வை அடைகிறது.விழிப்புணர்வே பக்தி என்னும் மார்கத்தின் பயன்.விழிப்புணர்வே மெதுவாக நம்மை அறிய வைக்கும்.நான் என்பது எனது உடலோ,மனமோ அல்ல என்ற உண்மையை விழிப்புணர்வே தெளிவாக்கும்.

விழிப்புணர்வே மாயைக்குள் மேலும் மனம் பிடிபடாமல் பாதுகாக்கும்.நாம் யார் என்பதை அறிந்தவுடன்,நமது மூல காரணப் பொருள் எது என்ற கேள்வி வரும்.அப்பொருளே பரம்பொருள்.அந்த பரம்பொருளுடன் சதா நாம் தொடர்புடன் வாழ வேண்டும்.எந்த வாழ்க்கை வாழ்ந்தாலும்,பரம்பொருளுடன் நாம் விழிப்புணர்வு என்ற செல்ஃபோனில் தொடர்பு கொண்டபடியே வாழவேண்டும்.அதனால் பேரின்பசுகம் பெறலாம்.வேண்டியதெல்லாம் கைகூடும்.பற்றில்லாமல்
வாழலாம்,கண்ணனைப் போல் அனைத்தையும் அனுபவிக்கலாம்.அதுவே ‘‘வீடு பேறு’’.
பரமாத்மா----ஜீவாத்மா உறவு:*ராமன் பரமாத்ம.சீதை ஜீவாத்மா.விழிப்புணர்வே லட்சுமணன்.சதா அவன் இருவருக்கும் இடையிலேயே எங்கு செல்லினும் பிரியாமல் ,தூங்காமல் விழித்திருந்து காக்கிறான்.

மாய மானைக் கண்டு ஆசைப் பட்ட சீதைக்காக ராமன் அதைத் தேடிப் போகிறார்.ஆனால் மாயா சக்தியால் அவ்ர் இறந்ததாக சீதை தவிக்கிறாள்.லட்சுமணனைப் போகச் சொல்கிறாள்.பரமாத்மாவின் சக்தியைப் பரிபூர்ணமாக உணர்ந்த அவன் செல்ல மறுக்கிறான்.அப்போது சீதை மிகவும் மனம் புண் படும்படி அவனைப் பேசி அனுப்புகிறாள்.செல்லும் முன் அவன் கூறுகிறான்,‘‘என்னவோ ஆபத்து ‘னிகழ உள்ளது,திரும்பி வரும்போது இவளை மீண்டும் பார்ப்பேனா என்பது சந்தேகமே!!!’’ என்கிறான்.

எந்த நொடியில் விழிப்புணர்வான லட்சுமணன் பிரிந்தானோ சீதையாகிய ஜீவன் ஆணவமாயா ரூபியான ராவணனனிடம் மாட்டிக் கொள்கிறாள்.இலங்கை என்னும் அழகான கிளிக்கூண்டில் சிறையாகிறாள்.

நாம் தான் ஜீவாத்மா.இதை மேற்சொன்ன சாதனைகள் மூலம் அறிகிறோம்.பரமாத்மாவே கடவுள் எனப்படுகிறது.இரு ஆத்மாக்களின் தொடர்புபலவகைகளில் அடியார்களால் அனுபவிக்கப் படுகிறது.தாயாய்,தந்தையாய்,எஜமானனாய்,தோழனாய்,அரசனாய்,...பரமாத்மாவை நாம் காண்கிறோம்.

இவற்றுள் தலைசிறந்த பாவம் ‘‘நாயக---நாயகி’’ உறவு தான்.அன்பால் காதலில் வாழும் இவர்கள் இடையே எழும் பூசல்களும்,சச்சரவுகளும்,கடைசி வரை எப்படியோ விட்டுக்கொடுத்து,கற்பு நெறி மாறாது கடைசி வரை வாழும் வாழ்க்கையில் பல சாதனைகள் புரிகின்றனர்.அதனால் பரிபூர்ண சரணாகதி ஏற்படுகிறது.அந்த சரணாகதியே விழிப்புணர்வு பெற ஒரே வழியாகும்.
இந்த உறவு நிலையிலேயே நம் மதத்தில் இறைவனை ஆண் என்றும், ஜீவாத்மாவைப் பெண்ணான அவன் தேவி என்றும் அமைத்துள்ளனர் நம் முன்னோர்கள்.இந்த கோட்பாட்டின் படியே ~திருவரங்கப் பங்குனி உத்திரம் அமைகிறது.

வாருங்கள் தாயாரும் பெருமாளும் என்ன செய்தார்கள் என்று பார்க்கலாம்.